DR. BEATRIX D'SOUZA : Hon. Speaker Sir, apart from reports of papers being leaked out, this year, according to the Association of Heads of Schools—S.S.L.C. Schools and Higher Secondary Schools,—the questions themselves were very obscure and ambiguous in Mathematics, English and Social studies. Also, according to reports, a social worker has claimed that cyclostyled answers to the leaked question papers were smuggled into the examination hall. In fact, the whole examination system has become a kind of obstacle race and the final hurdle is their evalution which is so erratic that very often the students fail by a very narrow margin. I would like to know whether the Hon. Minister would consider, after computerisation of marks, whether students should not be allowed to fail by a margin below 5 marks. Sometimes they fail by 2 marks.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு சம்பந்தமாக எல்லா பிரச்சினைகளையும் தொகுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக கேள்வித்தாள் ஏதேனும் கடுமையான கேள்வியாகவோ, அல்லது சிலபசுக்கு அப்பாற்பட்ட கேள்வியாகவோ கேட்கப்பட்டிருக்குமேயானால் அதைஎல்லாம் திருத்துகின்றபோது கவனத்தில் எடுத்து மார்க் தரவேண்டுமென்ற ஒரு முறையை நம் தேர்வுத்துறை பின்பற்றி வருகிறது. மற்றபடி ஏதேனும் தவறு செய்து இருப்பார்களேயானால் அந்த புகார் வரும்போது அந்தப் புகாரின் அடிப்படையில் விசாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மற்றபடி எந்தவிதமான தவறும் நிகழக் கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 502, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

502—

கிண்டி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் தற்காலிகப் பட்டதாரி அட்டவணையாளர்கள்.

* 20542—திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டியிலுள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள தேர்வுப் பிரிவில் தற்காலிகமாகப் பணிபுரியும் பட்டதாரி அட்டவணையாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் தற்காலிக பட்டதாரி அட்டவணைப் பணியாளர்கள் தங்கள் பணியை நிரந்தரம் செய்ய வேண்டி தொடுத்துள்ள வழக்குகள் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்திலும் உச்சநீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளன. எனவே இவ்வழக்குகளில் தீர்ப்பு பெறப்படும் வரை இது குறித்து எந்த ஒரு முடிவும் எடுக்க இயலாது.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று கூறினார்கள். தற்போது தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணியாற்றும் ஏறக்குறைய 80 நபர்கள் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு ஆண்டுக்கு 240 நாட்களுக்கு மேல் பணியாற்றி இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு தினக் கூலியாக 40 ரூபாய் கிடைக்கிறது. அது இந்த கால கட்டத்தில் வாழ்க்கை நடத்தப் போதுமானதாக இல்லை. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதை கருணை உள்ளத்தோடு பரிசீலித்து நம் அரசு அவர்களுக்கு தினக் கூலியாக 60 ரூபாய் அளவில் வழங்க—அந்த வழக்கு தீர்ப்பு ஆகும் வரையில் 60 ரூபாய் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தால் அது தெரிந்ததற்குப் பிறகு, அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம் என்பதுதான் முறையாக இருக்கும் என்கின்ற காரணத்தால் இப்போது இந்தப் பிரச்சினையை நாம் பரிசீலிக்க விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 503—திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

503—

கிராமப்புற மக்களுக்கு சுற்றுப்புறச்சூழல் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல்.

* 11235—திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமப்புற மக்களுக்கு சுற்றுப்புறச் சூழல் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வீடியோ பொருத்திய பேருந்துகளைத் தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?